**CRMP. NO. 176/2026** தேதி: **04.05.2026**

**<u>மசா 1 திரு. ராஜ்மோகன் த/பெ கோவிந்தராஜன் நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரது சத்தியபிரமாணம் வாக்குமூலம் :</u>**

1. நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கின் எதிரிகளான அருள்ராஜ் , சிவகுமார் ஆகியோர் தாசில்தாராக தஞ்சாவூர் தாலுக்காவில் பணிபுரிந்து வருகிறார்கள். எனது தகப்பனார் கோவிந்தராஜன் அவர்களால் கிரயமாக பெற்ற அசையா சொத்தின் நிலத்தின் புல எண் 228/2 புளியம் தோப்பு கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 6000 சதுர அடி பரப்புள்ள நிலத்தின் ஒரு பகுதியான சுமார் 5000 சதுர அடி பரப்புள்ள நிலத்தினை தமிழக அரசாங்கம் 2013 ம் வருடத்தில் சாலை விரிவாக்கத்திற்காக கையகப்படுத்தியது. மேற்படி மீதமுள்ள இடத்திற்கு பட்டா வேண்டி தஞ்சாவூர் தாலுக்கா வட்டாச்சியர் அலுவலகத்தில் நான் அது தொடர்புடைய ஆவணங்களை இணைத்தும், அரசாணை நிலை எண் 210 ன் கீழ் 2024 ல் விண்ணப்பத்திருந்தேன். எனது விண்ணபத்தின் மீது எந்த நடவடிக்கையும் வட்டாசியர் அலுவலகத்தில் எடுக்கவில்லை. நான் பலமுறை அலைந்தும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வட்டாச்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் சித்ரா என்பவர் பணம் கொடுத்தால், பட்டா வழங்கி விடுவார் என்று என்னிடம் கூறினார். அதை என்னால் ஏற்க முடியவில்லை. அதனால் கால கெடுவுடன் கூடிய சட்ட அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட்டது. அதற்கும், எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கபடாததால் தஞ்சாவூர் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு எண் 191/2024 தொடர்ந்தேன். அந்த வழக்கின் விசாரணை முடிவில் இரண்டு வாரங்களுக்குள் பட்டா வழங்க வேண்டும் என உத்தரவு போடப்பட்டது. வழக்கு செலவுக்காக ரூ. 2000/-யும், மன உளைச்சலாக்குகாக ரூ. 3000/- யும் சேர்த்து 2026 பிப்ரவரி மாதம் உத்தரவு போடப்பட்டது. நீதிமன்ற உத்தரவிற்கு பிறகும், தற்போதைய வட்டாட்சியர் திரு. சிவகுமார் அவர்கள் , எந்த முன்எடுப்பும் செய்யவில்லை. இதனால் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற கோரி பதிவஞ்சலின் வழியாக மனுதாக்கல் செய்தேன். அந்த மனுவிற்கும் எந்தவிதமான நடிவடிக்கையும் இல்லை. அந்த மனுவின் தன்மை அறிந்து கொள்ளும் விதமாக பாரதிய சாட்சிய அதிநியம் 2023 பிரிவு 75 ன் கீழ் தகவல் கோரும் மனு ஒன்று அளிக்கப்பட்டது. அதற்கும் எந்த தகவலும் அளிக்கபடவில்லை. நான் பல மாதங்களாக அலைக்கழிக்கப்பட்ட பின்னர் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில் குறிபிடப்பட்டுள்ள மன உளைச்சலுக்கான ரூ. 3000/- யும், வழக்கு செலவு தொகை ரூ. 2000/- கேட்காமல் எந்த பிரச்சனையும் செய்யாமல் இருந்தால் பட்டா வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன் பட்டா வழங்கப்பட்டது. இதற்கிடையே முன்னால் வட்டாசியர்

திரு. அருள்ராஜ் அவர்கள் நுகர்வோர் நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பாக செய்திகளை புனைந்து பொய்யான ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியுள்ளார்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.<br>**ஒப்பம் - கனிமொழி**.,L.L.M.,<br>நீதித்துறை நடுவர் எண்–I,<br>தஞ்சாவூர். |